# வாழைக்கான விலை முன்னறிவிப்பு

இந்தியாவில், வாழை 9.16 லட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 33.83 லட்சம் டன்கள் உற்பத்திச் செய்யப்படும் என வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிக்கையானது (2020-21) தெரிவித்துள்ளது. கர்நாடகா தெலுங்கானா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை வாழை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தேனி, திருச்சி, திருநெல்வேலி தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகியவை வாழை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும்.

திருச்சி, திருநெல்வேலி, கடலூர், தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை வாழை விற்பனை செய்யும் முக்கிய மாவட்டங்களாகும், இவற்றுள் திருச்சி, வாழைக்கு முக்கிய சந்தையாகும். திருச்சியிலிருந்து வாழை, மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது லால்குடி, புதுக்கோட்டை, முசிறி மற்றும் தேனி ஆகிய பகுதிகளில் இருந்து வாழையின் வரத்து திருச்சி சந்தைக்கு அதிகளவில் உள்ளது. வர்த்தக மூலங்களின் படி, பண்டிகை காலங்களில் வாழைக்கு அதிக தேவை இருக்கும்.இந்த ஆண்டில், அதிகமான மழையின் காரணமாக உற்பத்தி அதிகரித்துள்ளதால் சந்தை வரத்து மற்றும் தேவைக்கு இடையே உள்ள இடைவெளி குறைய வாய்ப்புள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 18ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தையில் நிலவிய பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவின் அடிப்படையில் பிப்ரவரி முதல் மார்ச் 2022மாதங்களில் பூவன் வாழையின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15-17, கற்பூரவள்ளி ரூ. 15-20 மற்றும் நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு

ரூ.32-35 வரை இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611269

## Price Forecast for Banana

Banana is cultivated 9.16 lakhs hectare with a production of 33.83 lakh tonnes in India during 2020-21 according to the Second Advance Estimates of Ministry of Agriculture and Farmer Welfare. Karnataka, Telangana, Kerala and Tamil Nadu are major Banana growing states. In Tamil Nadu, major banana growing districts are Coimbatore, Theni, Trichy, Tirunelveli, Tuticorin and Kanyakumari.

Banana Market Centres in Tamil Nadu are Trichy, Tirunelveli, Cuddalore, Theni and Coimbatore. Among them, Trichy is one of the major centre for the despatch of banana to various parts of the State. At Present, banana arrivals are mainly from Lalkudi, Karur, Thanjavur Pudukottai, Musuri and Theni to Trichy market. Traders reported that demand for banana may rise mainly due to festival season. On the supply side, because of high rainfall in this year, the production has increased which may lead to reduce the supply - demand gap.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analysed the past 18 years prices of cultivars of Poovan, Karpooravalli and Nendhran banana of Coimbatore. The results of analysis and trader survey indicated that the expected average farm gate price will be around Rs.15-17 per kg for Poovan, Rs.15-20 for Karpuravalli and Rs.32-35 per kg for Nendhran respectively, in Coimbatore market during February-March’2022. Hence, farmers are advised to take appropriate selling decision accordingly.

***For further details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003.*
*Phone: 0422-2431405*

***For technical details please contact:***

*Professor and Head*
*Department of Fruit Crops*
*Horticultural College & Research Institute*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611269*